**வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி – 2020/2021**

வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். பிரிவு 16(2) இன் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு நிறுவனத்திற்குமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், பிரதான கணக்கீட்டு அலுவலரால் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விதிகளினால் வழங்கப்படுகின்ற காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உபபிரிவு 38(1)(ஈ) இன் பிரகாரம் வருடாந்த மற்றும் நிதிக்கூற்றுக்களை சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதை உறுதி செய்வதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு நிறுவனம் தொடர்பாக வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பிரதான கணக்கீட்டு அலுவலர் வேண்டப்படுகின்றார்.

**2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணங்களின் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியின் ஆறு மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் அவற்றின் தயாரிப்பிற்கு பொறுப்பான நபரினால் சான்றுறுதிப்படுத்தப்படுவதை கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதி செய்ய வேண்டும்.

**2.1 நிதிக்கூற்றுக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் அரச கம்பனிகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் 2018/2019, 2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 ஆம் நிதியாண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் 2022 செப்டெம்பர் 15 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019/2020 ஆம் வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் ஆகஸ்ட் 31 வரையில், 2020/2021 ஒக்டோபர் 31 இற்கு மற்றும் 2021/2022 திசெம்பர் 31 இற்கு முன்னரும் சமர்ப்பிக்கப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றிக்கைப் பிரகாரம் குறிப்பிட்ட தினத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்பக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 (2) (எ) பிரிவு | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற மற்றும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தை அரசு அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் வைத்திருந்தால் அக் கம்பனிகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீ.ஈ.டீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் | | | |
| | (i) 4.2.2 ஆம் பந்தி | கம்பனியினால் செயலாற்றல் மதிப்பீடு மற்றும் தேவையான கட்டுப்பாடொன்று நிறுவப்படுவதற்காக பணிப்பாளர் சபை மாதாந்தம் கூட்டப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கூட்டங்கள் ஆறு தடவைகள் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தன. | கொவிட் நிலைமையின் காரணமாக பணிப்பாளர் சபை நடாத்தப்படுவதற்கு முடியாதிருந்தமையால் எதிர்காலத்தில் முறையாக நடாத்தப்படுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 5.2.3 மற்றும் 4 ஆம் பந்திகள் | வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படுவதற்காக நிதிப்பிரிவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 6.5 ஆம் பந்தி | கம்பனியினால் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற் கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 7.4.5 ஆம் பந்தி | நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியசாலைப் பொருட்களுக்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபை நியமிக்கப்பட்டு பொருட் கணிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் வருடத்தின் பின்னர் பொருட் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | பொருட் கணிப்பீட்டுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வணிக நடவடிக்கைகளுக்காக குறுங்கால மற்றும் நீண்டகால தூரநோக்குடன் ஒருங்கிணைந்த திட்டமொன்று மற்றும் எதிர்வரும் நிதியாண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்பாடுகளை உள்ளடக்கியதான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | தயாரிக்கப்பட்டுள்ள வருடாந்த அறிக்கை இத்துடன் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் | | | |
| (i) | 10 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவு | ஊழியர் சேம நிதியப் பங்களிப்புத் தொகை ஒவ்வொரு மாதத்திற்காகவும் அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் ஊழியர் சேம நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டியுள்ள போதிலும் நான்கு சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 3,408,357 ஆன பங்களிப்புத் தொகை 01 மாதம் தொடக்கம் 03 வரையான கால தாமத்தில் செலுத்தப்பட்டிருந்தது. | கொவிட் நிலைமை காரணமாக கம்பனியின் கடமை நடவடிக்கைகள் மற்றும் நிதி நிலைமை மோசமடைந்துள்ளமையா லும் பெற வேண்டிய கடன் தொகை குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காததால் நிதி நிலைமை நல்ல நிலைமைக்கு வந்த பின்னர் குறிப்பிட்ட கொடுப்பனவுகளை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 16 ஆம் பிரிவு | ஒரு ஊழியருக்காகப் பணி வழங்குநரால் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை குறிப்பிட்ட தினத்தில் செலுத்தப்படாமையால் ஒரு ஊழியருக்காக செலுத்தப்பட வேண்டிய சேம நிதியத் தொகை ரூபா 74,130 மற்றும் அதற்கான தண்டப் பணம் ரூபா 37,065 உம் ஆக மொத்தம் ரூபா 111,195 ஆனது தவணை அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. | பாதுகாப்புச் சேவை நிரந்தரமானதல்ல என்பதால் ஒவ்வொரு நபரின் பங்களிப்புத் தொகையும் அவர்களது வருகையின் அடிப்படையில் சுமார் 03 மாதங்களுக்கு மட்டுமே செலுத்தப்படுகின்றது. எனவே அந்த ஊழியர் வருகை தந்த தினத்திலிருந்து சேம நிதியம் செலுத்தப்பட வேண்டுமென தொழிலாளர் அலுவலகத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அத்தொகை பின்னர் செலுத்தப்பட்டிருந்த மையால் எதிர்காலத்தில் இவ்வாறு ஏற்படாதிருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவு | ஒரு ஊழியருக்காகப் பணி வழங்குநரால் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை ஒவ்வொரு மாதத்திற்காகவும் அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டியுள்ள போதிலும் முன்று சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 399,266 ஆன பங்களிப்புத் தொகை 01 மாதம் தொடக்கம் 03 வரையான கால தாமத்தில் செலுத்தப்பட்டிருந்தது. | கொவிட் நிலைமை காரணமாக கம்பனியின் கடமை நடவடிக்கைகள் மற்றும் நிதி நிலைமை மோசமடைந்துள்ளமையா லும் பெற வேண்டிய கடன் தொகை குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காததால் நிதி நிலைமை நல்ல நிலைமைக்கு வந்த பின்னர் குறிப்பிட்ட கொடுப்பனவுகளை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையில் 4.2.1 (அ) பந்தி | பெறுகைப் பிரிவினால் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்காக நிதிப் பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் அச்சகத்திற்காக மீளாய்வாண்டில் எதிர்காலத் திட்டம் தயாரிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் இணங்காணப்பட்டிராததுடன் 2018 ஆம் வருடத்திற்காக தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட வருமான நிலையை அடைந்து கொள்வதற்கு 2020 ஆம் வருடம் வரையில் முடியாதிருந்தது. மீளாய்வாண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு சேவை வழங்கியதன் மூலம் ரூபா 3,697,748 ஆன வருமானமொன்று ஈட்டப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தின் 1.9 சதவீதம் ஆகும். மீளாய்வாண்டில் வெளித்தரப்பினருக்கு சேவை வழங்கியதன் மூலம் ரூபா 4000 வருமானமொன்று ஈட்டப்பட்டிருந்த போதிலும் அது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தின் 0.006 சதவீதம் ஆகும். அத்துடன் அச்சகத்தின் 2018 ஆம் வருடத்தின் வருடாந்த வருமானம் ரூபா 16,968,205 ஆக காணப்பட்டதுடன் 2020 ஆம் வருடத்தின் போது வருமானம் ரூபா 4,696,748 ஆகும். அது 72 சதவீதமாக குறைவடைந்திருந்ததுடன் கம்பனியின் அச்சகத்தின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பாக முகாமைத்துவம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | புதிய முகாமைத்துவத்தினால் அச்சகம் தொடர்பாக அவதானிக்கப்பட்டுள்ள வருமானம் ஈட்டப்படுவதற்காக அச்சகத்தில் மூன்று ஊழியர்களை நியமித்து அவர்கள் வெளியார் கட்டளைகளை எடுப்பதற்காக பெறப்படுகின்ற கட்டளைகளுக்காக 3% தள்ளுபடியொன்று வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | வருமானத்தை மேம்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படல் வேண்டும்.. |
| (ஆ) | இலங்கை வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் அச்சகப் பிரிவின் சேவையாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம் மற்றும் அப்பிரிவினால் ஈட்டப்படுகின்ற வருடாந்த வருமானம் ஆகியவற்றை பரீட்சித்த போது 2020 ஆம் வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 3,701,748 ஆக இருந்த போதிலும் வழங்கப்பட்ட சம்பளம் ரூபா 6,043,284 ஆகும். அதன் பிரகாரம் 2020 ஆம் வருடத்தில் ஈட்டப்பட்ட | இக்காலப் பகுதிக்குள் நிலவிய கொவிட் நிலைமையின் காரணமாக அச்சிடுதல் கட்டளைகளை மேற்கொள்வது சிரமமாக இருந்ததுடன், ஊழியர்கள், அனைவரும் நிரந்தர ஊழியர்களாக இருப்பதால் சேவைக்கு சமூகமளிக்காமல் இருந்தவர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | வணிக நடவடிக்கைகள் இலாபகரமான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமொன்றை விஞ்சியதாக ரூபா 2,341,536 அதாவது மொத்த வருமானத்தில் சம்பளமாக 163 சதவீதம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அச்சகத்தின் வருமானத்தை மேம்படுத்துவதற்காக கட்டளைகளைப் பெற்று விளைவற்ற வேலை நேரத்தின் பெறுமதியைக் குறைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | இளைஞர் உறுப்பினர்களுக்கும் மற்றும் பொருளாதார ரீதியில் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்குவதற்காக இலங்கை வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் கீழ் 1983 ஆம் வருடம் 06 நோக்கங்களை நிறைவேற்றும் எதிர்பார்ப்பில் இளைஞர் சேவைகள் பெயரில் அச்சகமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு வரையில் ஆரம்பிக்கபட்டு 37 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களைள் நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்தது. | இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்தில் கம்பனி ஆரம்பிக்கப்பட்டாலும் அந்தக் காலத்தில் அச்சகத்தினால் பல பயிற்சிகள் இளைஞர் யுவதிகளுக்கு அளிக்கப்பட்டிருந்ததுடன் ஒரேயொரு அச்சிடும் இயந்திரம் மட்டுமே இளைஞர் சேவைகள் கம்பனியிடம் காணப்பட்டதால் அவ்வப் போது பயிற்சி அளிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டது. ஆனால் அச்சகத்தில் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு குழுவினர் அச்சகத்தில் நிரந்தர வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்ததுடன் மேலும் ஒரு பகுதி வெளியார் நிறுவனங்களுக்கு அனுப்பபட்டுள்ளனர் என்பதுடன் தற்போதுள்ள அச்சக இயந்திரத்தின் மூலம் இலக்கை அடைந்து கொள்வது கடினமென்பதைக் குறிப்பிடுகின்றேன். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முகாமைத்துவத்தின் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | மூன்று புதிய இளம் ஜோடிகளை இணைத்து சந்தைப்படுத்தல் குழுவொன்றாக பயிற்சி அளித்து சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தை தொடங்குதல், ஆரம்ப நிலையில் நிறுவனங்களின் பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் போன்றவற்றை அச்சிடுவதற்கான கட்டளைகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் புதிய தொழில்நுட்ப முறைகள் மூலம் சேவைகளை வழங்குவதன் மூலம் விற்பனையை அதிகரிப்பதற்கு அச்சகத்தினால் 2018 ஆம் வருடத்தில் திட்டமிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது இந் நடவடிக்கைகளுக்காக சிலர் இணைக்கப்பட்டுள்ளனர். | திட்டங்களின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கம்பனியின் அச்சகப் பிரிவின் களஞ்சியசாலையில் காணப்பட்ட பொருட்களில் 36 பொருட்களின் இருப்பு நிலை பூச்சியமாக இருந்தது. இருப்புக்களின் மீள் கட்டளை அளவு, மீள் கட்டளை நிலை, குறைந்தபட்ச இருப்பு நிலை மற்றும் உயர்ந்த பட்ச இருப்பு நிலை பராமரிக்கப்படும் போது முறையாக செயற்படுத்திச் செல்வதற்கு உயர் முகாமைத்துவத்தின் கவனம் கோரப்படாமை காரணமாக 05 கட்டளைப் பணிகளில் 55775 அலகுகளுக்கான கட்டளைகள் வழங்கப்பட்டு ஒரு மாதத்திற்கும் மேற்பட்ட காலமாக அக் கட்டளைகள் நிறைவேற்றப்படுவதற்கு முடியாதிருந்தது. | அச்சகக் களஞ்சியத்தில் உள்ள பிரச்சினைகள் (தண்ணீர் உள்வருதல், எலிகள் அதிகமாகக் காணப்படுதல், கறையான்கள் அதிகமாக இருத்தல்) காரணமாக பொருட்களை இருப்பாக சேகரித்து வைக்க முடியாமல் இருப்பதுடன் குறிப்பிட்ட கட்டளைகளுக்காக மட்டும் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. | உகந்தளவு இருப்பு நிலைகளைப் பராமரித்து அச்சக நடவடிக்கைகளை முறையாக செயற்படுத்துவதற்கு முகாமைத்துவத்தின் கவனம் கோரப்படல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்காக 2013 ஆம் வருடத்திலிருந்து நடவடிக்கைகள் எடுக்கப்படாததுடன் உதவிக் கணக்காளர் பதவி 2019 யூன் 03 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. இந் நிலைமை இறுதி நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படாமைக்குக் காரணமாக இருந்தது. | கணக்காளரின் வெற்றிடத்திற்காக ஆட்சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆட்சேர்க்கப்படும் வரையில் நிதி ஆலோசகர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |